T. DRe. No 3607
RR No 33-3-3 1891.

[illegible]

[illegible]

1. [illegible]

HOME SERIES.

TRAVELS TO OTHER COUNTRIES.

I.—EUROPE

WITH

VERSE LETTERS IN TAMIL

AND

MAP PICTURES, &c.,

BY

V. KRISHNAMACHARIAR,
FELLOW OF THE UNIVERSITY OF MADRAS.

நாநாதேச யாத்திரை சரித்திரம்.

I. ஐரோப்பாகண்டம்.

இஃது
சிறுவர்கள் பாடசாலைகளிலும் வீடுகளிலும்
தாமே வினோதமாகப் படித்துக்கொள்ளும்படி
பலவர்ண சித்திரப் படங்களுடன்
நாநாதேச சரித்திரங்களைச் சங்கீதப்பாட்டாகவும்
வசனரூபமாகவும்

வ. கிருஷ்ணமாசாரியர்
இயற்றியது.

MADRAS:
1891.

TO

MISS E. A. MANNING,

WITH HER KIND PERMISSION,

THIS BOOK IS DEDICATED,

IN GRATEFUL RECOGNITION

OF HER ACTIVE SYMPATHY

WITH

THE CAUSE OF FEMALE EDUCATION IN INDIA

AND

AS A SMALL TOKEN OF UNINTERRUPTED REGARD & ESTEEM,

BY

THE AUTHOR.


BRITISH ISLES
ATLANTIC OCEAN
Wick
Aberdeen
Dundee
Edinburgh
Glasgow
NORTH SEA
Newcastle
Belfast
IRISH SEA
York
Leeds
Hull
Manchester
Liverpool
Dublin
Cork
Birmingham
Bristol
LONDON
ENGLISH CHANNEL
POSTAGE
TWO PENCE
HALF PENNY

இங்கிலாந்து

இப்புத்தகத்திலிருக்கும் சித்திரப்படங்களில் நாநாதேசத்துக்கொடிகள், தபால்முத்திரை, விருது ஆயுதங்கள், பிரதான நகரங்கள் நதிகள் மலைகளுடன் எல்லைவரைந்துகாட்டிய தேசப் படங்கள், கூடகோபுரங்கள், சனங்களுடைய நடையுடை பாவனைகள், வேட்டைவினோதங்கள் முதலானவைகளைக் காண்க.

நாநாதேச யாத்திரை சரித்திரம்.

ஐரோப்பாகண்டத்திற்குப் போகிறதைப்பற்றியது.

சென்னபட்டணத்தில் பொன்னுசாமி என்று ஒரு சிறுவனிருந்தான். அவன் மிகுந்த சுறுசுறுப்புள்ள ஒரு நல்லபிள்ளை. அவனுடைய தாய்தகப்பன்மார் இரண்டுபேரும் இறந்து போனார்கள். அதனால் அவனுடைய பெரிய அத்தையாராகிய சொக்கம்மாள் அவனையும் அவன் சகோதரியான சுந்தரத்தையும் தன்வீட்டில் வைத்து வளர்த்துக்கொண்டு வந்தாள். அவளும் அவள்புருஷனும் பிள்ளைகளும் இச் சிறுவர்களிடத்தில் மிகவும் ப்ரீதியாய் நடந்துவந்தார்கள். அந்தச் சொக்கம்மாளுடைய புருஷன் ஒரு பெரியவியாபாரி. அவனுக்கு லிவர்பூல் நகரத்தில் கொஞ்சம் வர்த்தகவேலையிருந்ததனால் அவன் அவ்விடத்துக்குத் தான் போகும்போது சிறுவர்கள் எல்லாரையும் ஐரோப்பாவுக்கு அழைத்துக்கொண்டுபோய், அங்குள்ள அழகிய தேசமாகிய இங்கிலாந்தையும் ப்ரான்ஸ், ஜெர்மனி, இத்தாலியா, ஸ்பானியாமுதலிய மற்றத்தேசங்களையும், காட்டுவதாகச்சொன்னான். அதுகேட்டு அந்தச் சிறுவர்களெல்லாம் அவ்விடம்போக அதிக ஆசை கொண்டிருந்தார்கள் என்பதையும் நாம் சொல்லவேண்டுமோ? இப்படியிருக்க அவர்கள் பிரயாணப்படுவதற்கு முன்னே ஒருநாள் ஐயோ பாவம்! பொன்னுசாமி விளையாடும்போது தவறி விழுந்து அதிகமாய்க் காயப்பட்டு வெகுநாள்வரையில் உடம்பு சௌக்கியப்படாமல் இருந்தான். வெகுதூரம் கடலின்மேல் பிரயாணம்செய்யத் தக்க தேகவலிமை அவனுக்கில்லையென்றும் அதனால் அவன் வீட்டைவிட்டு அசையக்கூடாதென்றும் வைத்தியனும் சொல்லிவிட்டான். ஆகையால் அவன் நாநாதேச யாத்திரைபோவதற்கு அனுகூலப்படாமல் போயிற்று. இஷ்டமானால் சுந்தரம்மாள்மாத்திரம் தங்களோடு புறப்பட்டு வரலாம் என்று வர்த்தகன்சொன்னான்;

ஆயினும் அச்சிறுமி அதற்கு ஆசைப்படவில்லை. அவள் தன் சகோதரனிடத்தில் மிகவும் பக்ஷமுள்ளவளாகையால் அவனைத் தனியேவிட்டுவிட்டுப் போவதற்குச் சம்மதப்படாமல் அவ்விரண்டு பேரும் வீட்டிலேயே நின்றுவிட்டார்கள். கடலில் கப்பலேறிப் போகும்சமயத்தில் அந்த வர்த்தகனுடைய கடைசிமகனாகிய சுலோசனனும் சுந்தரத்துடன் தான் விளையாடிக்கொண்டு வீட்டிலேயே இருப்பேனென்று கப்பலேறாமல் நின்றுவிட்டான்,

அந்த வர்த்தகனும் மற்றப் பிள்ளைகளும்மாத்திரம் கப்பலேறச் சித்தமானார்கள். பிரயாணப்படும்போது அவர்கள் அங்கங்கே தாங்கள்பார்க்கும் அதிசயங்களையெல்லாம் அடிக்கடி விவரமாக வெழுதி அனுப்புவதாகவும், தாங்கள் திரும்பி வரும்போது அருமையான பல விளையாட்டுக் கருவிகளும் விசித்திரமான சாமான்களும் வாங்கிவருவதாகவும் சொன்னார்கள். அவர்கள் மாத்திரம் புறப்பட்டுப் போகிறார்களென்று சுலோசனன் கொஞ்சமும் விசாரப்படவில்லை. நீங்கள் பற்பல காட்சிகளைப்போய்ப் பார்த்துவருவது எனக்கு வெகுசந்தோஷம்; நீங்கள் அங்கங்கிருந்து எங்களுக்கு அனுப்புகிற தபால்கடிதங்களில் ஒட்டியிருக்கும் தேசாந்தரத்துத் தபால் முத்திரைகள் மிகுதியாய்க் கிடைக்கும்; அதையெல்லாம் ஒழுங்காய்த் தனிப்புத்தகத்தில் வேடிக்கையாய் ஒட்டிவைப்பேன். எங்களுக்கு நீங்கள் அனுப்புகிற கடிதங்களெல்லாம் பாட்டுகளாகவே எழுதியனுப்பினால் மெத்தவும் நன்றாயிருக்கும் என்று சந்தோஷமாகச்சொன்னான். அப்படியே ஆகட்டுமென்று அவர்கள் சொல்லிவிட்டுச் சிறிய அத்தையாராகிய தில்லையம்மாள் இடத்தில் மூன்று பிள்ளைகளையும் ஒப்பிவித்துப்போனார்கள். அப்புறம் வர்த்தகனுக்கு மூத்த மகனான சாமி என்பவன் முதலில் இங்கிலாந்திலிருந்து சுலோசனனுக்குக் கொம்மிப்பாட்டாக இதனடியிற் காட்டியவாறு ஒருகடிதம் எழுதி அனுப்பினான்.

இங்கிலாந்துதேசத்திலிருந்து சாமியென்பவன் அனுப்பிய கடிதம். (ராஜதானி: லண்டன்.)

கொம்மிக்கண்ணிகள் - இராகம் - உசேனி - ஏகதாளம்.

தானே வர் வேல்வானே ! உன்னை நம்பினேன்
தனயன் வாக்கினில் நீயிருந்தே
நானாதேச யாத்திரை சரிதத்தை
நடத்த வேண்டி வணங்கினனே.

தம்பி! எங்களுடைய க்ஷேமங்களைத்
தானே யெழுதினேன் கண்டுகொள்வாய்
எம்பெருமானுடைய கடாக்ஷத்தினால்
எல்லோரும் சுகமாய் வந்துசேர்ந்தோம்.

நம்முடைய நாட்டை விட்டுக் கப்பலேறி
நடுக் கடலினில் போகும் போது
சும்மா வோடின கப்பல் அதுமெத்தச்
சுழன்று சாய்ந்து ஓடவே;

பித்தந் தலைக்கேறி மயக்கங் கொண்டு
பித்தநீரைமெத்த வாந்திசெய்தேன்
கர்த்தன் கருணையால் லிவர்பூல் நகரக்
கரை துறைகண்டு அங்கிறங்கி;

சற்றே யிளைப்பாறி தைரியம் கொண்டு
   சாவ தானமாக அந்தவூரை
முற்றிலுஞ் சுற்றிப் பார்த்து வருகையில்
   முன்னே பற்பலபஞ் சாலைகண்டோம்.

பஞ்சாலைக்குள்ளே நுழைந்துபோய் பார்க்கில்
   பந்தி பந்தியாக இராட்டினங்கள்
செஞ்சா மாருதம் போலே சுழல்கிற
   சித்திர வேலையை யென்னசொல்வேன்!

பஞ்சுகளை யெல்லாம் மெல்லிய நூலாக்கிப்
   பத்து கொடியில் அணியாக்கி
கொஞ்ச நஞ்சமல்ல, போர்போ லாகக்
   குவித்து விடும்லூர் யந்திரமே.

அந்த லிவர்பூல் நகரந் தனைவிட்டு
   ஆவலுடன் புகை வண்டியிலே
சிந்தை மகிழ்ச்சியா யேறிக்கொண்டு வெகு
   சீக்கிரமாக மாஞ் சேஸ்தர்சேர்ந்தோம்.

லண்டன்மா நகரத் திற்குப்பின் போக
   நான்கண்ட காட்சியைச் சொல்லுகிறேன்
எண்டிசை யெங்கெங்குந் தேடிப்போய்ப் பார்த்தாலும்
   இந்த நகரம்போ லெங்குமில்லை,

வெண்ப ளிங்குமாட மாளிகை மெத்தை
   விநோதப் பதுமைகள் வீதியெல்லாம்
ஸெண்டுபால் கோபுரக் கோள உயரத்தைத்
   தேர்ந்து ரைக்கவு மடங்காது.

விக்டோரி யாள்ராணி வாசம் செய்யும்
   விசால உப்பரிகை என்னசொல்வேன்
கற்கட் டடமும் சித்ரவேலை யழகும்
   காணவும் ஓர்லக்ஷம் கண்வேணுமே.

குதிரை வீரரும் பட்டா ளங்களும்
   கூட்டிக் கணக்கிடப் போகாதே
எதிரிக ளில்லை ; வந்தா லொருவனை
   எட்டிப்பார்த் தோட்டம் பிடிப்பாரே.

வீதிகளை விட்டு நந்த வனங்களில்
   வேடிக்கை யாகத் திரிவோரும்
பேதமே யில்லாமல் ஒருவர்க் கொருவர்
   பேசிடும் ஒருமை என்னசொல்வேன்!

கடைத் தெருவின்சிங் காரத்தைக் கண்ணாலே
   கண்டால் பசிஆறிப் போகுமே
உடை நடைகொடி பாகனை ஓட்டமும்
   உரைக்க என்னாலு மாகாதே.

சத்திய மென்பதை முன்னிறுத்தி அர
   சாளுகிறார் மஹா ராணியாரும்
எத்திசை ராஜரும் வந்து பணிந்திட
   இருந்து செங்கோல் செலுத்துகிறார்.

இது வரையிலும இந்த அரசிபோல்
   யாரும் ஆண்டதில்லை என்கிறார்கள் ;
பொதுவாய்க் குடிகள் சபைகூடிப் பேசிப்
   பொது நன்மையைத்தே டுகிறார்கள்.

பிள்ளைகள் நான்கும் பெண்கள் ஐந்தும்
   பெற்ற மஹாராஜி ராணி யாராம்
கள்ளங் கபட மணுமாத்திர மில்லாக்
   குணசாலி யென்று போற்றுவாராம்.

ஆயிரத் தெண்ணூற்று முப்பத்தே ழாண்டி
   லரசியார் பட்டந் தரித்துக்கொண்டார்
ஆயிரத் தெண்ணூற்று நாற்பதாம் ஆண்டில்
   அழகாய்க் கல்யாணஞ் செய்துகொண்டார்.

ஆகவே யிப்போது ஐம்பது வருஷம்
   அரசு ஆண்டதைக் கொண்டாடி
யோகக்ஷே மங்கள்உண் டாகவே யாவரும்
   ஒருமித்து மங்களம் பாடுகிறார்.

மழை மாத்திரம் அடிக்கடி தூறும்
   மப்பு மந்தாரமாக இருக்கும்
பொழுதைக் காண்ப தரிதாகும் இங்கிலாந்தில்
   பொய்யல்ல மெய்தான் நம்பு தம்பி!

ஷாப்புக்கு அப்பாஎன்னை யழைத் துப்போன
  சங்கதி கொஞ்சம் சொல்லுகிறேன்!
ராப்பக லையும்நொ டியினிற் காட்டும்
  ரவைகடி யாரம் பலவுங்கண்டேன் ;—

கோழி கூவுங் கடியார மணி
  கேட்டாற் சொல்லுங் கடியாரம்,
நாழிகை காட்டுங் கடியாரம், சென்ற
  நாள்களைக் காட்டுங் கடியாரம்.

சிறு பொம்மை எனைப்பார்த்துச் சலாம்
  செய்யும் புதுமையை நான்பார்த்தேன்
நாநா விதப் படங்களும் பழங்களும்
  நான்வாங்க வேண்டுமென் றாசைகொண்டேன்.

படத்தின் சட்டத்தில் கயிறொன்று தொங்குது
  பற்றி யதைச்சற் றிழுத்துவிட்டால்,
தடதட வென்று வாத்திய முண்டாகுஞ்
  சங்கதி யென்சொல்வே னிங்கிதமே.

அப்பா எனக்கொரு மாலுமி உடுப்பை
  அதிசய மாக வாங்கித்தந்தார் ;
எப்பவும் படவு பந்தயம் விட்டிடும்
  இந்நாட்டுப் பிள்ளை உடுப்பிதென்றார்.

மான்வேட்டையும் முயல் நரிகள் வேட்டையும்
  மாறுமலே ஓடும் நாய்வேட்டையும்
தான்வேலித் தாண்டுங் குதிரைகள் மேலேறிச்
  சகல வர்ணச்சொக்காய்ப் போட்டாடுவார்.

எந்த மனிதரும் வேட்டை யாடுதற்கே
  இச்சை யுடையவ ராயிருப்பார்
சிந்தையில் ஜீவகா ருண்ணிய மில்லார்போல்
  ஜனங்கள் பலருண்டு இங்கிலாந்தில்.

போர்க்கப்பலும் பல சரக்குக் கப்பலும்
  புகைபோட் டோடும் அணியணியாய்ப்
பார்ப்பவ ருக்கெல்லாம் கப்பற்கா டாகப்
  பாவி யிருக்கும்தேம்ஸ் ஆற்றோரத்தில்.

ஊரு நிறைந்த ஜனங்களுண்டு அவர்
  ஒருவரும் வேலையில் லாமலில்லை ;
தேரும் திருநாள்போல் எந்நாளுமே சிறப்
  பாயிருக்கும் லண்டன் பட்டணமே.

பட்டணமோ லண்டன் பட்டணமே யிதைப்
  பாராதிருந்தோர் கண்ணும் அவமே
எட்டுநாள் பார்த்தாலும் விட்டுவிடா தாசை
  யிதுவும் நாங்கள் செய்ததவமே.

லண்டன் நகரத்தோர்க் கருப்பு காவத்தில்
  நமக்கனுப்பிறோர் [illegible] பணம்
கண்டு களித்தோமல் லோயிக்நீ [illegible]தைக்
  காப்பாற்றுவதே யவர்கள் குணம்.

ஒப்பிட்டுச் சொல்லவொ ருருமில்லை - உவ
  மானம் சொல்லவென்றால் நாவுமில்லை ;
இப்படி யாகத் துரைத்தனம் செய்பவர்
  எந்நாளும் உலகில் வாழ்கவே !

வாழ்கவே வாழ்கவே ! ராணியா ரவர்
  வம்சம் தழைத்தோங்கி வாழ்கவே !
தாழ்வேது மில்லாமல் நம்மை யாண்டுவரும்
  சக்கர வர்த்தினி வாழ்கவே !

பர்மிங்காம், லீட்ஸ், ஹல், யார்க்கு,
  பிரஸ்தல், ந்யூகாஸில், எடின்பரோ, க்ளாஸ்கோ
ஆபர்டீன் முதலான நகரங்களை
  அன்பாகப் பார்த்திடப் போய்வருவோம்.


RF
RF
15
ENGLAND
ENGLISH CHANNEL
Dover
Lille
Cherbourg
Havre
Rouen
PARIS
Brest
Orleans
Nantes
BAY OF BISCAY
Bordeaux
Toulouse
Marseilles
FRANCE.

ப்ரான்ஸ்.

பிரான்ஸ் தேசத்திலிருந்து அத்தையம்மாள் எழுதிய கடிதம். (ராஜதானி: பாரிஸ்.)

கண்ணிகள் - (இங்கிலீஷ்மெட்டு.)

லல்லல லல்லல லல்லல லல்ல லல்லல லாலல்ல - லல்ல
லல்லல லல்லல லல்லல லல்ல லல்லல லாலல்ல.

லண்டன்நகரி லிருந்துஉன்னண்ணன்
  எழுதினான் முன்னே - அப்பால்
கண்ட அதிசயத் தையெழுதுகிறேன்
  கண்டுகொள்வாய் பின்னே.

இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும்நடுவி
  லிருக்குங்கடற் காலில் - கேள்
எங்கள்கப்பல் காற்றுலடிபட்டு
  ஏகுந் தருவாயில்;

அலைகள்மோதி யடிக்கக்கப்பலுக்
  கபாயமென்றே நினைத்தோம் - நாங்கள்
அதிசீக்கிர மாகக் காலே என்னுந்
  துறைமுகம்வந்தோம்.

உடனேபாரிஸ் நகரத்தைப்பார்க்க
  உள்ளத்தி லெண்ணங்கொண்டு - அங்கே
ஒருதடங்கலு மில்லாமற்சென்றந்த
  நகரைக்கண் ணுறக்கண்டு;

கப்பலைவிட்டிறங்கி யதைக்கண்டது
  கண்செய்த புண்ணியமல்லோ - அதைக்
காணாதபேர் செழிப்பாய்வளர்நெல்லின்
  கதிரில் பதரல்லோ.

எங்கெங்கேபார்த்தாலும் பளிங்குச்சுவர்
  போலே பளபளப்பாய் - கட்டி
இருக்குமாளிகை மீதிற்சிகரங்கள்
  இட்டார் தளதளப்பாய்.

தெருவுகள்தோறும் உல்லாசமாகவே
  திரியும் பிரஜைகளும் - மெத்தத்
திருத்தமாய்ப்பல பலபண்டங்கள்வைத்
  திருக்குங்கடைகளும்

படைவீரர்எங்கும் நடமாடிக்கொண்
  டிருப்பதை கண்டென்று - நான்
பகருவேனவர் வீரமும்ஆஜானு
  பாகுவை யின்னதென்று.

வாத்தியம்வாசித்துப் போகும்சிறுவரை
  வர்ணிக்க எந்தரமோ - பல
வரிசைவரிசை யாகச்செல்வதைநான்
  வாயாற் சொல்லப்போகுமோ.

காலுக்குஜோடு கறுப்பாகப்போட்டுச்சி
  வப்பு நிஜார்மாட்டி - பார்
கனத்தநீலச்சொக் காய்க்குச்சரிகைபட்
  டைப்பட்டை யாய்க்காட்டி.

பந்துபோல்சிவப்புத் தொப்பியுந்தரித்த
  பகட்டைக் காணவே - பற்
பலரும்அவர்தன் னழகைக்கண்டு
  பதுங்கி நாணவே.

இத்தச்சிறப்பான பிள்ளைகள்சண்டையில்
  இறந்து போனாலே - ஐயோ
என்னஅநீதமென்றே சொல்லவுங்கூடும்
  எந்தன் வாயாலே.

பிராஞ்சதேசத்தில் சூரியன்நன்றாய்ப்பிர
காசித்துக் காய்வதுண்டு - மேலும்
பழவர்க்கங்க ளனேகமுண்டதைப்
பறித்துண்டிற் பாருமுண்டு.

கொடிமுந்திரிப் பழத்தைப்பிழிந்துசா
ராயமும் செய்வார்கள் - இதைக்
கொஞ்சமாய்க்குடித்த பேர்களுக்கல்ல
குணங்கெட்டுப் போகார்கள்.

ஆட்டுத்தோலால்நானா விதஉடுப்புங்கல்
விளைத்த நகைகளும் - அங்கே
அதல்லாமல்சிறு பிள்ளைகளும்விளை
யாடுங் கருவிகளும்.

[வேன்

ஒன்றுமொன்றுக்குறை வில்லைவேட்டைக்கோ
ருல்தொடை தட்டுகிறார் - யாரும்
உயர்ந்தகொம்புள்ள மான்வேட்டையாடி
உடனே திரும்புகிறார்.

ராஜனில்லாராணி யில்லையென்றதனால்
முத்திரையால் கண்டோம் - அந்த
நாட்டுக்குடிகள் க்ஷேமித்தவரோ அதி
காரஞ் செலுத்தக்கண்டோம்.

அந்தஅதிகாரம் ஆயுகவைக்கும்
செலுத்தக் கூடாது - நாட்டார்.
அப்போதுக்கப்போது ஏற்படுத்திக்கொள்ளும்
வழக்கந் தப்பாது.

கப்பல்பலமெத்த பிராஞ்சுக்காரர்க்குமுண்
கண்ணிற் காணவில்லை - மிக்க
கண வர்த்தகங்கள் நடப்பதால்கப்பல்
களைமை காடவில்லை.

சிறந்தபாரிஸ் நகரத்தருகில்
ஸின்னென் றோராறு - உண்டு
சீரானபெரிய கப்பல்மெதக்காதாம்
சிக்கையில் நீதேஅ.

இனிவிசேஷம் எழுதவகாசம்
இல்லையில்லை எனக்கு - இதோ
இந்தக்காகிதம் கடைசியாக
எழுதினே னுனக்கு.

அண்ணன்பிள்ளைகளே தம்பிபிள்ளைகளே
அன்பாய்க் கடவுளே - துணை
யாயிருந்து காக்கவேணுமென்று
எண்ணினேனே என்னுள்ளே.

பெல்ஜியத்திலிருந்து மாமன் எழுதிய கடிதம். (ராஜதானி: பிரஸ்ஸல்ஸ்)

தந்தம் தந்தம் தன தனன
தன தன தான தந்தனன.

அன்பும் பொறுமையும் அழகுமுள்ள
அருமருந்தான மருகனே ! உன்

அத்தையும் மக்களும் ஆசையொடு
அனுக்கிட கடிதம் எழுதுமென்றார் ;

ஆதலினாலே யிக்கடிதம்
அனுப்பினேன் வாசித் தறிந்துகொள்வாய்.

இப்போது நாங்கள் செல்லுகின்ற
மார்க்கத்தை சங்கதி சொல்லுகிறேன்.



பெல்ஜியம்.

நாங்கள் ஜெர்மனி தேசத்தை
நன்றாய் நாற்புறம் போய்ப்பார்த்தோம்.

கலோன் என்னும் பட்டணத்தைக்
கண்டே புகைக்கப்ப லேறிக்கொண்டு,

விஸ்தார மான தேசமது
வெகுவெகு ஆறுகள் ஓடுமங்கே.

அவைகளில் ரைன்என்னும் ஆறுண்டு,
அதிலே பாய்க்கப்ப லேறிச்சென்றோம்;

அந்த நதிக்கரை அருகினிலே
அநந்த மலைகளை யுங்கண்டோம்.

அம்மலை களிலேறிப் பார்ப்பதற்கு-உன்
ஆசை மச்சானும் ஆவல்கொண்டான்!

கப்பலை விட்டுக் கரையிறங்கி
கால்நடை யாகப் போய்ப்பார்க்க,

இப்போது சரியல்ல எனவிட்டு
எண்ணியே கொஞ்சம்தூரம் போகையிலே,

அதிவே கமதாய்ப் போய்ச்சேர்ந்தோம்!
அவ்விடத்தில் அதி சயமான

ஆலய மொன்றைத் தான்கண்டோம்!
அன்றங் கிருந்து மறுதினத்தில்

அவ்விடம்விட்டுப் பயணப் பட்டு
அழகான பிரஸ்ஸல்ஸ் நகரம்வந்தோம்.

பெல்ஜிய மென்று பேர்பெற்ற
பெருநாட் டிற்கிது ராஜதானி,

நீர்வளமும் அதன் நிலவளமும்
நிறைந்த தேசம் அதுதானே.

ஒருமலை யாவது அங்கில்லை
ஊரைச் சுற்றிப் பார்க்கையிலே

உள்ள மனிதர்களோ வெகுசுத்தி
உடுபா வனைகளும் அப்படிதான்.

பூர்வகாலப் பட்டணங்கள் பலஉண்டு
புகழ்பெற்ற இடங்களும் சிலஉண்டு.

ஆறுகளும் நீ ரோடைகளும்
அங்கங்கே பாய்வது அதிசயமே.

பிரஸ்ஸல்ஸ் சிங்காரத் தோட்டத்தின்
பெருமையைக்கண்டோம் கண்ணார

அந்தத் தோட்டத்தை நீகண்டால்
அதைவிட்டு வெளிவர விரும்பாயே.

படைவீ ரர்களின் பிரதாபத்தைப்
பலவாறாயிங்கே காணக்கூடும்.

பண்டிகை தினத்தில் பலர்உடுக்கும்
பாவனைச் சொல்ல என்றால்வசமோ!

பிள்ளைகள் பெண்கள் களிப்புடனே
பிரியமாய் ஆடும் விளையாட்டை

சித்திரப் படத்தில் நீபார்த்தால்
சிறப்புகள் எல்லாம் விளங்கிடுமே.

எங்கெங்கும் பார்த்தாலும் படைவீரர்
இஷ்டமா[illegible]டியெல்லாம் உலாத்துவார்

நீலவர்ணச் சட்டைகளும் தொப்பிகளும்
நிஜார் சாம்பல்வர்ண மாகத்தரிப்பார்.

பொன்பிடி கத்தியும் பளபளென்ன
போட்டிருக்கும் உடுப்புகள் தளதளென.

சிலகாலத் துக்குமுன் வாதர்லூவில்
செய்திட்ட போர்க்களத் தையுங்கண்டோம்.

போனபார்த்து என்னும் அதிசூரன்
போர்புரிந் தானும்அந்த ரணக்களத்தில்;

இங்கிலாந்து தேசப் படைத்தலைவர்
எதிர்த்துப்போர் புரியும் தருவாயில்

அங்கே ப்ருஷியர் படையுங்கூட
அபஜயம் தானே யடைந்தானும்.

போனபார்த்து என்போன் முதுகுகாட்டிப்
போனவிடம் இதுநீ தெரிந்துகொள்வாய்.

பெல்ஜியத்தை விட்டு ஆஸ்தெண்டு
பெருநக ரத்தையும் பார்த்துக்கொண்டு

பத்து தினத்தில்இத் தாலியர்தேசம்
பாங்காய்ச் சேருவோம் மருமகனே!

அவ்வூ ரதிசயந் தனைப்பார்த்து
அன்பா யெழுதுவோம் தேவனருளால்.

இத்தாலியா தேசத்திலிருந்து தம்பிக்குத் தமையன் எழுதுகிற கடிதம். (ராஜதானி: ரோமபுரி.)

கண்ணிகள் — ஏகதாளம்.

தனம் தனம் தனம் தனம் தனம் தானனா
தனம் தனம் தனம் தனம் தனம் தானனா.

இம்மா நிலத்திற் சிறந்தது இத்
  தாலியா தேசமே - இங்கே
இருந்து கடிதம் எழுதினேன் எனக்
  குன்மேல் பாசமே.

சித்திர சிற்ப கீத வாத்தியங்கள்
  இங்கே வேடிக்கை - மெத்த
சிறியர் பெரியர் யாவரும் பழக்கம்
  செய்வது வாடிக்கை.

பெரும் பாதரக்ஷை போலிருக்கு மிது
  நீண்ட நாடுதான் - முனையில்
பெரிய விரலால் தள்ளுண் டிருக்கும்
  ஸிஸிலி தீவுதான்.

ஆஸ்தண்டு நக ரத்தி லிருந்து
  நெப்போலிக்கு வந்தோம் - சேர்
அதி வேகமாய்க் கப்பலேறி அந்
  நகரத்தைச் சேர்ந்தோம்.

எங்களுக்குக் கப்பல் யாத்திரை
  என்றும் இன்பமே - ஆனால்
என் னண்ணனுக்கு மாலுமி யாக
  இப்போது எண்ணமே.

கடல் நீருங்காற்றும் எங்க ளுடம்புக்குக்
  கலந்திருந்தாலும் - அப்போ
கண்டது தலைநோ வெனக் கம்மாளுக்கும்
  சல தோஷத்தாலும்.

போக்கிக் கொண்டோமதை கஷாயத்தால் நெப்
  போலி நகருக்குநேர் - இந்தப்
பூமியெங்கும் தேடி னாலுமில்லை
  புகழைச் சொல்லுவேன்பார்.

நீலவர்ணக் குடாக் கடலைச் சுற்றிவெண்
  ணிறமான - வீடுகள் பார்க்க
நெருங்கி யங்கே பயிரிடுங் குடிசன்
  நிறைந்த நாடுகள்.


Milan
Venice
Bologna
CORSICA
ROME
MEDITERRANEAN SEA
ITALY.

சூரியன் உச்சியில் நின்றும் பிரகாசமாய்த்
தோன்றுகிறா னிங்கே - நன்றாய்
சொலிக்கும் விஸ-ூவியஸ் என்ற மலையும்
அடுத்துக் காட்டுதங்கே.

அக்கினிக் கல்மழை பெய்கிறது கொ
தகங்க ளுருகியே - நெருப்
பாறு போல ஓடிவரும் பெரும்
வெள்ளம் பெருகியே.

அப்போது அங்குள்ள வீடுகளும் பற்றி
யெரிந்து போய்விடும் - நாங்கள்
அங்கிருக்க மன மில்லை ; யிருந்தால்
அபாயம் நேரிடும்.

நெப்போலியை விட்டு ரோமகா புரிக்கு
நேராகச் சென்றோம் - அது
நெடுநாளாய்ப் பேரும் புகழும் பெற்றதை
நாம்படித் திருக்கிறோம்.

இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னே
ஏற்பட்ட ரோமபுரம் - அங்கே
இருக்கும் பழைய கட்டடத் தழகை
யாரால் சொல்லத் தரம்.

இத்தாலியா, தேசம் நான்கு புறத்திலும்
இருக்கும் பட்டணத்துள் - ஒன்றும்
இணை யில்லாத வெனிஸ் நகரத்தின்
சிறப்பைச் சொல்லுவேன் கேள்.

பாரிங்கே குதிரை யோடும் சத்தமும்
பண்டியோடும் சத்தமும் - நிதம்
பந்தி பந்தியாக மனிதர் நடக்கும்
ப்ராதனைக்கூ சத்தமும்.

இல்லை யென்றா லுனக்கே அதிசய
மாகவே தோணும் - உற்று
எங்கே பார்த்தாலும் தெருவொன்று மில்லாமல்
ஆறுகளே காணும்.

ஓட மேறி யொருத்தர் வீட்டுக் கொருவர்
போவ தல்லாது - வெரு
ஒய்யார நடை நடந்து போகவொரு
நாளுங் கூடாது.

சிறைச்சாலை யொன்றை பாலந்துக் கருகில்
கட்டி யிருந்தார்களாம் - முன்னே
சிந்தைநொந்து சிறைப் பட்டவர் பெருமூச்
செறிந்து சென்றார்களாம்.

அந்தக் காரணத்தால் "பெருமூச்சுப் பாலம்"
என்று பேராச்சுது - இன்னும்
அதைப்போல் அனந்தம் வாரா வதிகள்
அதன்பின் வாச்சுது.

இத்தாலி யாவில் திராக்ஷை பழங்கள்
இருக்குந் தோட்டத்தில் - குடிகள்
இன்ப மான பாட்டுகள் பாடியே
வருங்கொண் டாட்டத்தில்.

பழ ரசத்தைப் பீப்பாயில் நிறைத்துப்
பலருங் கூடியே - மாட்டு
பண்டியி லேற்றிக் கொண்டு போகப்
பாலர்கள் கூடியே.

சிறுவர்கள் பல வாத்தியங்கள் வாசித்து
வீதியில் கூத்தாடவும் - வண்டிமேல்
திராக்ஷ ரசத்தை ஒருவன் கொடுக்கத்
தென்பாய்ப் பாடவும்.

ஒருவன் வாத்தியம் ஊதுகிறான், ஜாதி
குரங்கொன் றவனண்டை - இருந்து
ஓடி ஓடிக் குதித்துச் சந்தோஷம்
கொள்ளுது ஓரண்டை.

அப்போது நினைத்தேன் நீயுமிங் கிருந்தால்
ஆடலாம் பாடலாமே - என்றும்
அதுவு மல்லாமல் அவர்கள் கூட்டத்தில்
அப்போதே கூடலாமே.

இப்படி யெல்லாம் எண்ணங் கொள்ளக்கொள்ள
இராத்திரி ஆய்விட்டது - நாங்கள்
இந்தத் தேசம்விட்டு நாளைப் புறப்பட
யத்தனம் நேரிட்டது.

இனிமே லுனக்கு எங்கள் சின்னத்தம்பி
ஸ்பானியா தேசத்திலே - போய்
இருந்து காகிதம் எழுதுவா னென்று
எண்ணிக்கொள் மனதிலே.

சின்னதம்பி ஸ்பானியாவிலிருந்து எழுதிய கடிதம். (ராஜதானி: மாட்ரிட்.)

கண்ணிகள் - இராகம் - முகாரி, ஏகதாளம்.

(ஒருகப்பலோடிவந்து பட்டணஞ்சேர்ந்து) என்னுஞ்சந்தம்.

இத்தாலியாதேசம்விட்டு நீராவிக்கப்பல்
ஏறிச்சென்றோம்நாங்களனை வோர்களுமுன்னே
இட்டத்துடன்அதைவிட்டுப் புகையாலோடும்
இரண்டாம்வகுப்புவண்டியில் ஏறினோம்பின்னே.

மாட்ரீட்என்னுமாநகரந் தன்னிற்சேர்ந்து
மாநகரைச்சுற்றிப்பார்த்து வரும்போது
வெட்டவெளிமணற்பாங்கே நாலுபக்கமும்
வெயிலினால்படும்பாட்டைச் சொல்வேனிப்போது.

மேல்காற்றடிக்கமணல் மேலேயெழும்பி
வீதியிற்போவோர்வருவோர் கண்ணைநிறப்பும்
கால்மேலும்முகத்திலும் ஈயரவைபோல்
கனத்தமணல்கள்அடி படும்ஒறப்பும்.

படுமென்றுஅம்மாள்சொல்லத் தெரிந்துக்கொண்டு
பத்திரமாயதைவிட்டு அப்புறம்சென்றோம்
கொடியபாலைவனம் வறண்டதுபோல்
கொடிசெடிமரமொன்றும் காணமல்நின்றோம்.

இப்படிப்புல்முளையாமல் இருந்தாலும்
என்னென்றுசொல்லுவேன் ஜலாதாரம்
எப்பவும்குறைவில்லாமல குழாயந்திரத்தை
எங்கும்வைத்திருப்பதுவே உபகாரம்.

ஜாடியில்ஜலம்நிறைத்து வீடுகள்தோறும்
தந்துஅவர்கொடுத்ததை வாங்கிச்செல்கிறார்
நாடிஉடன்தன்தங்கச்சியாம் மங்கத்தாளுக்கு
நானொருசங்கதிஎழு துவேனிதோபார்.

சிலபெண்டுகள்தலையில் தொப்பிகளில்லை
சித்திரப்பூவேலைசெய்த ஜாலர்துணியே
நலமாய்த்தலையில்போட்டுக் கொண்டுபுஷ்பத்தை
நன்றாய்ச்சொரிகிக்கொள்வது தான்பணியே.

கறுப்புமயிருக்கும் அழகுக்கும்
கதம்பபுஷ்பஞ்சொருகுங் குழலுக்கும்
தெறிப்பாய்கையில்விசிறி யால்வெயிலைத்
தெரியாமல்மறைத்தவர் செல்லும்ஒயிலும்.

பிராஞ்சுதேசத்தாரைப்போல் ஆடல்பாடல்மேல்
பிரியம்உள்ளவரென்று தெரிந்துகொண்டேன்
சரியானமனதுடன் உன்னைநினைத்துத்
தான்கடிதம்எழுதும்போதொன்றுநான்கண்டேன்.

வீதியிற்புருஷன்தம்புரு வாசித்துச்செல்ல
வேடிக்கையாய்ப்பெண்சாதியும் ஆடியேவந்து
தாதாவென்றுசொல்லிப்பிச்சை கேட்கிறார்ஆட்டு
தந்தாலோவாங்கிசெல்லு கிறார்பரிந்து.


SPAIN
AND
PORTUGAL
Pampelona
Burgos
MADRID
Toledo
Seville
Gibraltar

ஸ்பானியா -- போர்த்துகல்.


AUSTRIA & HUNGARY
Lemberg
VIENNA
Buda
Pesth
Gratz
Szegedin
GULF OF VENICE
Ragusa
10

ஆஸ்திரியா—ஹங்கெரி.

கூட்டங்கூட்டமாகஆடிக் கொண்டுபோவதும் [தும்
கொண்டாட்டமாய்மேளம்தட்டிக் கொண்டுசெல்வ
நாட்டமுடன்கண்டோம்,இந்த விசித்திரத்தை
நானதைச்சொல்லத்தரமோமுழுதும்.

ஆனாலும்ஸ்பானியாதேசத் திலேவெறுப்பு
ஆனகாரியமொன்றுண்டு அதனைநீகேள்;
மேனாளினில்செய்தபாவத்தால் மிருகங்களாய்
மேதினியில்வந்துபிறந்தே இந்நாள்;

கோவேறுகழுதைக்கு சவுக்கடியும்
குதிரைகள்அடிபடும் கோரத்தையும்
ராப்பகல்உழுமாடுகள் தாத்துகோல்குத்தும்
ரத்தமொழுகச்சாயங்கால மட்டும்அடியும்.

சந்துக்குச்சந்தடிபட்டுத் தாங்காஜந்துக்கள்
தத்தளித்துக்கிடந்திடக் கண்ணாரக்கண்டேன்
இந்ததொல்லைநிரச்சட்டம் ஏற்படுத்தினால்
எவ்வுயிர்க்கும்துக்கமில்லை யென்றெண்ணம்கொ
[ண்டேன்.

வருகிறவாரம்போர்த்துகல் தேசம்போவோம்
வளப்பமுள்ளதுதான்,ஆனால் சிறுதேசம்
பெரியஸ்பானியாதேசத்து வலப்பக்கத்தை
பேருதவியாகஅதைச் சார்ந்ததேசம்.

ஸ்பானியாவுக்கும்கடற்கும் மத்யதேசம்
பின்னோரதிசயுமில்லை நீதெரிவாய்
சயனத்துக்குப்போகும்வேளை யானதால்வந்
தனமுனக்குக்கடைமொழி ஈதென்றறிவாய்.

சின்னப்பெண் ஆஸ்திரியாதேசத்திலிருந்து எழுதியனுப்பிய கடிதம். (ராஜதானி: வியன்னா.)

(இங்கிலீஷ்மெட்டு.

லல்லாய் லல்லாய் லல்லாய் லல்லாய் லல்லாய் லல்லாய்லா
லல்லாய் லல்லாய் லல்லாய் லல்லாய் லல்லாய் லல்லாய்லா.

நாங்களிப்பொழுது ஆஸ்திரியா வென்னும்
நாட்டி லிருக்கின்றோம்
நல்லநா டானாலும் இத்தாலி யாவுக்குத்
தாழ்ந்ததென் றெண்ணுகிறோம்.

இந்த தேசத்து ஜனங்கள் ஜர்மன
பாஷையைப் பேசுகிறார்
எங்களுக்கு நன்றாய்ப் பேசத் தெரியவில்
லையென்று ஏசுகிறார்.

அங்குள் ளவரால் தெரிந்து கொண்டு
பேசும் உச்சரிப்பு
ஆச்சரிய மென்று சொல்லு கிறார்கள்
அதெங்கட்குச் சிரிப்பு.

லிஸ்பன் நகரத்தி லிருந்து கப்பலேறிப்
புச லடித்துக்கொண்டு
இருக்கும் எட்ரியா டிக்குக் கடல்தாண்டி
வந்தோம் கரையைக்கண்டு.

கடலின் யாத்திரை யைப்பார்க்கி லும்பூமி
யாத்திரை நல்லதென்று
கருத்தி லெண்ணி திரீஸ்து என்னும்
துறைமுகம் நோக்கிச்சென்று.

இந்த நகரம் ஆஸ்திரி யாப்பட
டணங்களில் பெரிது
இது வியாபாரத் தால்பெரு மைபெற்று
எழில் நலமுள்ளது.

வாசனை யுள்ள தேவதாரு விருக்ஷ
வளத்தை யிங்குகண்டோம்
மற்றொரு மரமும் இங்கே முளைத்திட
மாட்டாதென் றெண்ணிக்கொண்டோம்.

மலைகளிற் கணை வாய்களிற் புகுந்து
வழிகண்டு நடந்து
மகாசூரர் வாழும் திரல்என்றும் துறை
முகம்வந்து சேர்ந்து.

எத்திசை பார்த்தாலும் குன்றும் தடாகமும்
எண்ணக் கூடாமரமும்
இந்த நகரத்தைச் சூழ்ந்திருக்கும் ஆல்பஸ்
என்னும் பருவதமும்.

பனி விடாமல்சூழ்ந் திருக்கு மென்றுநீ
படித்தா யல்லவா
பார்த் திதோபனி மூடும் உச்சிகளைப்
பகுத்துச் சொல்லவா.

காடு நிறைந்த தடாகக் கரைநோக்கிப்
பின்புஅவ் வழிசென்றோம்
கான்ஸ்தன்ஸ் என்னும் பட்டணம் அதனில்
களிப்புடன் வந்துநின்றோம்.

அங்கேதான் ஜான்ஹஸ் ஜரோ மிருவரும்
அரும் சிறைப்பட்டார்
அவரைச் சமய பேதத்தால் கம்பத்தில்
கட்டிக் கொளுத்திவிட்டார்,

முன்னாள் கொடுமைகள் செய்த அவ்வூரை
முழுதும் பாராமல்
முந்தி நடந்ததெங்கள் புண்ணியம் அங்குள்ள
ஊர்க்கரைச் சேராமல்.

எனக்குத் தோன்றின தென்ன வென்றால்சிற
கிருந்தால் உனக்கின்று
எங்க ளுடன்கான்ஸ் தன்ஸ் நகரத்தை
இருந்துபார்ப் பாயேஇன்று.

உன்னத மலைத் தொடர்பும் வரிசையாய்
உள்ள தடாகத்தையும்
உயர்ந்து சிகரம் வானத்தை முட்டுமொப்
பில்லாஆ லயத்தையும்.

வயனா நகரம் சிறந்ததென் றுந்தன்
வாயாலே சொல்லுவாய்
வந்து பார்க்காத பேர்க்கிதன் பெருமைவர
ணித்துச் சொல்லிவெல்லுவாய்.

அழகாய் வெள்ளைச்சட்டை போட்டு குதிரைவீரர்
அணியணியாய்ச் செல்லுவார்
அவர்க ளுடனே யுத்தம் செய்து
யாவர்தான் வெல்லுவார்.

எங்கே பார்த்தாலும் திருவிழாப பண்டிகை
நடக்கும் நாள்போலே
எந்த மனிதரும் நல்ல உடுப்போ
டிருப்பார் நபாப்புபோலே,

வீதிக்கு வீதி ஆட்டம் பாட்டங்களும்
வெகுவினோதமே
விதம் விதமாய் பாண்டுவாத் தியத்துடன்
பாடுவார்கள் சங்கீதமே.

ஆஸ்திரியா தேசத்தில் பண்டிகை நாளையில்
அற்புத வேடிக்கை
அல்லும் பகலும் வயனா நகரத்தில்
அதுவே வாடிக்கை.

இந்தப் பட்டணத்து மத்தியில் டான்யூப்
என்னும் நதியது
என்றும் வடியா தோடிக்கொண்டே ஹங்கேரி
தேசத்திற் போய்ப்பாயுது.

அப்பாமாத் திரம்அந்த ஹங்கிரி நாட்டைப்
பார்த்துவந் திருக்கிறார்
அங்கே புராதனக் கட்ட டத்தின்
அதிசயத்தைச் சொல்லுகிறார்.

[illegible]ாவி தாவு ஜலா தாரம்
[illegible]ழுதிக் கிழும்உண்டு
கல்லை [illegible]ற்றம்போட்டுத் தண்ணீ ரிறைக்கிறார்
நன்றா[illegible] பாய்வதுண்டு.

இவ்வூரி லிருக்கும் பிள்ளைக ளோரடிவர்
தெட்டிப் பார்க்கிறார்
என்னமீன் பிடிக்க இத்தனை பெரிய
தூண்டிமுள் ளென்கிறார்.

ஏற்றத்தைக் கண்டிசெ தென்ன யந்திரமென்
றாச்சரியம் கொள்ளுகிறார்
எந்தத் தேசத்துத் தூண்டிமுள் ளோவென்று
யாவரும் பேசுகிறார்.

நாட்டுப் புறத்தார் உடுக்கும் உடுப்புகள்
நான் சொல்லக்கேட்பாய்
நடுத் தலைக்குக் கம்பளிக் குல்லாய்தைத்து
நன்றாய்ப் போட்டிருப்பார்,

மினிமினிப்புகள் காட்டும் சொக்காய். முழங்
காலின் கீழ்த்தொங்கும்
வெள்ளை பொத்தானிரு புறத்தில் வைத்து
வேடிக்கை யாய்விளங்கும்.

மரக் கட்டையின்மேல் தோல்தைத்துக் காலுக்கு
மாட்டிக்கொண் டேயிருப்பார்
மறந்து போகாமல் கையில்ஓர் கொம்பேந்தி
வரப்பெல்லாந் திரிவார்.

இந்த தேசத்தில் கண்ட காக்ஷியெல்லாம்
எழுதினேன் பாரு அங்
கிருந்த படியே யித்தனையுங் கண்டாய்
இணையுனக் காரு.

வயனு நகரில் இன்னும் இரண்டுநாள்
மாத்திரந் தானிருப்போம்
மற்று நாளைக்கு யாத்திரை செய்யும்
மார்க்கத்தில் சஞ்சரிப்போம்

பொன்னுசாமியின் அத்தைமுதலானவர்கள் நாநாதேசயாத்திரையாகப் புறப்பட்டு ஐரோப்பாகண்டம் முழுதும் சுற்றிப்பார்த்துத் திரும்பிவந்தார்களென்று சொன்னோமே - அவர்கள் உலாந்தாதேசத்துக்குப் போயிருக்கையில் அங்கே உலாந்தாகம்பி வர்த்தகம் செய்யப்போயிருந்த பொன்னுசாமியின் சிற்றப்பன் அவர்களைக்கண்டு, அவர்கள் சுதேசம் போனபிறகு தாய்தந்தையர் இல்லாத பிள்ளைகளாகிய பொன்னுசாமிக்கும் அவன் தங்கை சுந்தரத்துக்கும் தேகம் ஆரோக்கியமாயிருந்தால் ஒருதடவை அவர்களைத் தன் தங்கையுடன்கூட அவ்விடம் அழைத்துவர வேண்டும், அல்லது தகுந்த துணைகூட்டி அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார். ஆயினும் அவர்கள் சுதேசம்வந்த ஒருவருஷம் வரையில் ஏதோ சில அசந்தர்ப்பங்களால் அப்பிள்ளைகளை அனுப்ப அனுகூலப்படாமல் சும்மா இருக்கவே, ஒரு வருஷத்திற்குப்பிறகு உலாந்தாவிலிருந்த சிற்றப்பன் மறுபடி அந்த விஷயத்தை ஞாபகம்பண்ணி ஒரு கடிதமெழுதினார். அதைப்பார்க்கவே இவர்களுக்கு வெகு சந்தோஷமாயிற்று. முன் நம்முடன்வந்து நாநா தேசங்களையும் பார்க்க இப்பிள்ளைகள் கொடுத்துவைக்காமற் போனார்களே - இப்பொழுதாவது சுகமாகப்போய்ப் பார்த்துவரட்டுமென்று அந்த அத்தையும் அத்தைபுருஷனும் சந்தோஷமாக பொன்னுசாமியையும் சுந்தரத்தையும் அத்தையுடன் கூட்டியனுப்ப அச்சிறுவர்கள் முன் அவர்கள் சொல்லிப்போனதுபோலவே, தாங்கள்போய்ப்பார்க்கிற ஒவ்வொரு தேசத்திலிருந்தும் அந்தந்த தேசத்து அதிசயங்களைப்பற்றி அடிக்கடி கடிதமெழுதிவருவதாயும், முன் தங்களுக்குவந்த கடிதங்கள்போலவே இவைகளும் சங்கிதப்பாட்டுகளாகவே யிருக்குமென்பதாகவும் சொல்லிக் கப்பலேறிச் சென்றார்கள்.

கப்பலேறிக் கடல்யாத்திரையின் விநோதங்களையெல்லாம் அனுபவித்துக்கொண்டு சுகமாக உலாந்தாதேசம்போய்ச் சேர்ந்தார்கள். அங்கிருந்து அவர்கள் ருஷியாமுதலான தேசங்களுக்குப் போய் பார்த்து அங்கங்குள்ள அதிசயங்களையெல்லாம் எழுதியனுப்பினார்கள். கடிதங்கள் மிகவும் இனிப்பானவையாதலால் அவற்றை இதனடியிலெழுதுகிறோம்.

உலாந்தாதேசத்திலிருந்து பொன்னுசாமி எழுதுகிற கடிதம். (ராஜதானி: ஆமஸ்தர்டாம்.)

இராகம் - கமாஸ், தாளம் - ஆதி.

தேசங்களைப்பார்த்துவரப் போகுறேம்சொங்கள்-எங்கள்
க்ஷேமத்தையெழுதுகிறேன் அறிவீர்கள்

நாங்கள்கப்பலேறிக்கடல் மேலேபோகும்-போது
நல்லநல்ல அதிசயம் சதாகும்

நீங்கள்கூடவில்லையென்னுங் குறைமாத்ரம்-எங்கள்
நெஞ்சைவிட்டொழியவில்லை அணுமாத்ரம்

அத்தையம்மாளுக்குங்கள கம்மாளுக்கும்-கொஞ்சம்
அசவுக்கியம்கண்டது இருவருக்கும்

பித்தந்தலையெடுக்காமல் வருத்தப்பட்டே-இப்போ
பிராணபயமில்லாமல் சுகப்பட்டு

நாங்களெங்கேயிருக்கிறோ மென்றறிய-உனக்கு
நல்லமனமுள்ளதால் சொல்வேன்தெரிய

உலாந்தா தேசத்தில் வந்திருக்கிறோம்-இங்கே
உள்ள அதிசயம்சொல்ல மனங்கொள்கிறோம்

இவ்விடத்திலேழைகளும் பாதக்குறடு-போட்டு
எவ்விடமுந்திரிவதே எற்பாடு

வருஷமுழுதும்ஆசை கொள்வதிரண்டு-பனியில்
வருந்தாதிருக்கநல்ல யுக்திகொண்டு

சக்கரபாதக்குறட்டின் மேல்நடப்பதும்-நின்று
சற்றுநேரம்நல்லசுருட் டைப்பிடிப்பதும்

பனிக்கட்டியாகிவிட்ட தண்ணீரின்மேல்-வெகு
பரபரப்பாய்ஓடுகிறார் பாதக்குறடால்

பனிக்காலத்திலேஇங்கு சூரியன்எட்டி-வந்து
பார்ப்பதில்லைசனிலும் இதுவேகெட்டி

கோயிலுக்கும்பாதக்குறடிட்டுப்போகிறார்-பாதக்
குறடிட்டேகடைகட்கும் போய்வருகிறார்

இவ்வூரில்சிலசில ஆறுகளாக-வெட்டி
எங்கெங்கும்கடல்நீரைக் கால்வாயாக

[ளைப்
பனியின்பெருமையெல்லாம் இங்கேகாணும்-இ
பாராதிருப்பவர்க்கு என்னதோணும்

பனிக்கட்டிமேல்நடப்ப துல்லாசம்-அவர்
பாரின்மேல்நடக்கவென்றால் பிரயாசம்

ஆறுகளிலும்கால் வாய்களிலும்-நிதம்
அங்கங்கேபடகேறி செல்லுதலும்

இருப்புப்பாதையொன்றிங்கே உண்டாகும்-அப்போ
இத்தப்படகுசன்னை யொழிந்துபோகும்

ஆமஸ்தர்டாம்நகரைநீ பார்த்ததில்லையே-இப்போ
அதையும்தெரிந்துகொள் காகிதத்திலேயே

மேடைமாளிகையெல்லாம் ஜலத்தால்சுத்தி-இங்கே
வேலைக்காரர்கள்செய்கிறார் வெகுநேத்தி

கால்வாய்மீதுபோகவர இந்தஊரார்-கருங்
கல்லினால்வாராவதி கட்டியிருக்கிறார்

கடலிலேகப்பல்கள் அனந்தமிதக்கும்-அது
காடுமுடிக்கொண்டதுபோல் காண்பிக்கும்

பயிரிடுந்தொழில்களில் கைதேர்ந்தோர்-சிலர்
பக்ஷமாய்க்கடல்மேற்செல்ல மனமுவந்தோர்

காற்றால்சுழலுகின்ற யந்திரமொன்று-எங்கும்
கழனிக்குநீர்ப்பாய்ச்சக் கண்டோமின்று



NORTH SEA
Leeuwarden
Groningen
Helder
Meppel
ZUYDER ZEE
Haarlem
AMSTERDAM
Deventer
Zutphen
Delden
Utrecht
Delft
Rotterdam
Arnhem
Hertogenbosch
Breda
Middelburg
Flushing
Thorn
HOLLAND.


BALTIC SEA
Memel
Lubeck
Hamburg
Dantzig
Bremen
BERLIN
Hanover
Cologne
Leipzic
Dresden
Breslau
Coblentz
Frankfort
Mayence
Nurnberg
Carlsruhe
Strasburg
Stuttgart
Munich
GERMAN
EMPIRE.

ஜெர்மானியா.

பசுமாடுகன்றுநல்ல புல்லைக்கண்டு-அதன்
பசிதீரவுண்ணுதற்குப் புலங்களுண்டு;

நாநாவிதபுஷ்பச்செடி விருக்ஷங்களும்-பல
நந்தவனச்சிங்காரத் தோட்டங்களும்

கலைகுறிச்சொக்காய் கம்பளிகுல்லா-மேலே
கனயில்லாதிருக்கின்ற ரவசல்லா

குல்லாக்கள்பல்பல வர்ணத்திலே-போட்டு
கொண்டைப்பூசெய்துவைத்தார்கள் சொர்ணத்திலே

மஞ்சள்பட்டுத்துப்பட்டாவில் அழகாக-ஜாலர்
வைத்துத்தைத்துதோளில்போட்டார் ஓயிலாக;

கம்பளிபித்தியடியைக் காலிற்பூண்டு-விசையாய்
கடுசெடுகவைக்கிறார்கள் ஓர்தாண்டு

உலாந்தாதேசத்திலுள்ள பெண்களைப்போலே - தங்கை
உடுப்புடுத்துகிறாள்ஒவ்வோர் தினுசாலே.

இவ்வூரின்கடற்கரை அழுத்தமதாய்-உண்டு
எல்லோரும்விளையாடலாம் சந்தோஷமதாய்.

உனக்கும்மாமாவுக்கும் மாமிக்கும்வந்தனம்-எனக்
குண்மையானநேசருக்கும் செய்தேன்வந்தனம்.

உற்றார்உறவோர்களுக்கும் மிகவந்தனம் - ஊரில்
உள்ளஅனைவோர்களுக்கும் சொல்லேன்வந்தனம்.

நாளையதினம்டென்மார்க்கு தேசயாத்திரையும்-செய்ய
நாங்கள்போகிறோம்உங்களனைவோரையும்

அத்தையாரும்என்தங்கையும் விசாரிக்கிறார்-உனக்கு
அன்புள்ளவன்நானென்றுநீ யோசித்துப்பார்.

இதுவும் ஜெர்மானியாவிலிருந்து பொன்னுசாமி எழுதிய கடிதம். (ராஜதானி: பேர்லின்.)

கண்ணிகள் - இராகம் - உசேனி, ஏகதாளம்.

என்னைப்பெற்ற தந்தையே அத்தையம்மாளை
என்சுகமிற்கண்டு - கையில்
எடுத்தேன்காகிதம் எழுதலாமென்
றெண்ணம்எண்ணிக்கொண்டு.

இதுநீங்கள்முன்னே வந்துபார்த்துப்போன
ஜெர்மானியாதேசம் - இங்கே
இருந்துகொண்டு கடிதமெழுதினேன்
னைப்பிர்விச்வாஸம்.

ங்கள்ளான்நதிப் பிரயாணஞ்சென்றதும்
நதிக்கரைகளிலும் - மெத்த
ண்டமலைகளையும்கோட்டைகளையும்
பார்த்தேயிருந்தாலும்.

இந்தஅழகான நகரந்தன்னைப்பார்த்
திருக்கவேமாட்டீர் - முன்னே
இதுஜெர்மன்தேச ராஜதானியென்று
சொல்லக்கேட்டிருப்பீர்.

இதற்குப்பெயரோ பெர்லின்பட்டணம்
என்றேவழங்குது - ஆறு
இந்நகரத்தைச் சூழ்ந்தமதில்சுவர்
ஓரமாய்வோடுது.

ஒடும்இந்த ஜீவநதியோ
ஸ்பிரீ என்றுபேர்கொண்டது - அதைப்போல்
ஒருதேசத்திலும் விந்தையானபெயர்
எங்குமில்லைகண்டது.

இத்தனைபடை. வீரரையுங்காணெந்த
 தேசத்துங்கண்டதில்லை - மேலும்
இத்தேசத்தார்யுத்தத்தில் விருப்பமில்லை
 யென்றுநான்சொல்லவில்லை.

சிறியகாலாள்கள் பெரியபோராள்கள்
 முகத்திற்சிங்காரம் - நன்றாய்த்
தெரிவதல்லால் பயங்கரமொன்றும்
 செய்யார் ஆங்காரம்.

சரசமாய்ப்பேசக் கண்டேன்உள்ளத்தில்
 சஞ்சலத்தைஎண்ணி - அப்போது
தாங்கள்நொந்திருக்கும் குறிப்பைக்கண்டேன்
 தந்திரமாய்நேசம்பண்ணி.

இத்தேசப்பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலே
 வாசிப்பததிகமே - பிள்ளைகள்
எப்போதாகிலும் விளையாடுவார்களோ
 என்றால்அதுமிதமே.

போர்க்கோலஆட்டமும் போர்ச்சேவகர்கோலம்
 போலுமிருக்கிறது - வெளியில்
புறப்பட்டால் யுத்தத்துக்குப்போவார்போல்
 உடுப்புதரிக்கிறது.

குச்சுக்கொம்புகளை ஆயுதமாகக்
 கையில்பிடித்துக்கொண்டு - சிரித்து
கும்பல்கும்பலாக ஜீராவைப்போல்செய்த
 குல்லாதரித்துக்கொண்டு.

நெளித்துநடக்க வீதியில்பார்த்தேன்
 நேசனானஒருவன் - அங்குள்ள
நீண்டரைன்நதிக் கரையிலிருந்து
 வருகின்றானவன்.

அவனுடன்கூட வருகின்றநாய் —
 அவனைப்போல்கெண்டாய் - எங்கும்
அத்தனை உயர முள்ளநாயைப்
 பார்த்ததில்லைகண்டாய்.

மற்றொருதிசையில் கருங்காவிழுத
 லானதேவதாரு - என்னும்
மாமுள்ளகாட்டில் இத்தனையென்று
 எண்ணிப்பார்த்ததாரு.

அங்கிருக்கும்ஏழை ஜனங்கள்மரத்தை
 வெட்டியேஜீவனம் - அவர்
அப்போதுக்கப்போது செய்துகொண்டாலும்
 குறையாதுஅவ்வனம்.

பளிங்குக்கண்ணாடி சாமான்கள்பலவும்
 விசித்ரமாகக்கண்டேன் - அவ்வூரார்
பானமும்சுருட்டும் வாயைவிட்டிருக்கப்
 பார்த்ததில்லை விண்டேன்.

காரசாரசம் பாரம்சேர்த்த
 உணவை அதிகமாகத் - தின்னக்
கண்டேன் அந்தந்த வீட்டிலுண்டபோது
 கலந்து ஒருமையாக.

கிரிஸ்மஸ்பண்டிகை இந்தநாட்டில்
 மெத்தவேடிக்கையாம் - அது
விட்டநெருங்கா முன் ருஷியாதேசத்திற்கு
 நாங்கள் போகவேண்டுமாம்.

இந்தக்கடிதத்தை இங்கிருந்துநான்
 எழுதிமுடித்துவிட்டு - கேளும்
இதோஸ்விடன் தேசத்துக்குப்போகிறேன்
 இந்தஊரைவிட்டு.


SWEDEN AND NORWAY.
ATLANTIC OCEAN
Bergen
Christiania
STOCKHOLM
Christiansand
BALTIC SEA
NORGE
12
SVERIGE

ஸ்வீடன் நார்வே.

ஸ்வீடன் தேசம். (ராஜதானி: ஸ்ட்டாக்ஹோம்.)

கண்ணிகள், இ - ம் கியால், தாளம் ஆதி.

[மிட்டாய்பாட்டுச் சந்தம்.]

சமாசாரமனுப்பும் வரிசையென
   தாகையா லிப்பொழுது
தனியாயொருகடிதமெழுதுகிறேன்பார்
   தயைசெய் தென்மீது.

நாங்களிப்போதுசான் டென்மார்க்குதேசத்து
   வழியா யாத்திரைபோனோம்
நாலுபுறத்திலும் மரம்நிறைந்தகாட்டை
   நாங்கள் பார்க்கலானோம்.

ஆதாரமது இள வரசர்பத்னியார்தந்தை
   யரசா ளும்நாடு
அதன்கடற்கரையினில் கோப்பெனேகனெனும்ராஜ
   தானியே அவர்வீடு.

மணல்மேடுகளுள்ள சிலதீவுகள்சேர்ந்த
   நாடென் றதைவிட்டோம்
மற்றொருதீவிலிருந்து கப்பலேறிஸௌண்டென்னும்
   கடற்காலைத், தாண்டிப்போட்டோம்.

ஸ்வீடன்தேசத்தில்வந் திறங்கியேஇரவெல்லாம்
   புகைவண்டி தனிற்சென்று
ஸ்ட்டாக்ஹோம்நகரம் வந்துசேர்ந்து அங்
   கிளைப்பாறினோம் அன்று.

இந்தப்பட்டணத்துக்கு பேர்லின் ஆம்ஸ்தர்டா
   இரண்டுமே யிணையாகா [மும்
என்சொல்வேன்பெரிய தடாகத்தின்ஓரத்தில்
   இருக்குதோர் பட்டணமகா;

அழகுள்ளமாடங்கள் கூடங்கள் உப்பரிகை
   அநந்த மிருக்கக்கண்டோம்
அந்தடாகத்தில்சிறு புகைப்படகினிலேறி
   யாவும் பார்த்துக்கொண்டோம்.

சுற்றிவரும்போதங்கே சிறியஓர்திட்டைக்கண்டு
   சொகுசாயங் கிறங்கினோம்
சுகமாகப்பகலெல்லாம் அங்கிருந்தோர்விட்டிலே
   துரைமக்கள்போ லுறங்கினோம்.

இங்குவோதிசயம்! அர்த்தராத்திரியிற்கூட
   எங்கும் வெளிச்சமாக
இருப்பதல்லால்இருளென்பதைக்கண்டதில்லை;
   இருக்கட்டும் அதுபோக.

கோடைகாலந்தன்னில் சூரியன்உதித்தபின்னுங்
   குலையாது அந்தவிருள்
கொண்டிருப்பதால் கண்ணுக்குத்தெரியாது
   முன்னே இருக்கும்பொருள்.

இதற்குவடக்கிலுள்ள லாப்லாந்துதேசத்தில்
   இரவிற்சூரியனைக்காணலாம்
இந்தஸ்விடன்தேசத்தில்பனிக்கட்டியுங்குளிரும்
   எங்குமுண்டு தெருவெல்லாம்.

அதன்மேல்சக்கரமுள்ள பாதக்குரடுமாட்டி
   அவர்நடப் பதேவிக்கை
அடுத்தநோர்வேதேசக் குளிர்மிகுந்தபனியை
   அளவிடா தென்சிக்கை.

பனிமூடியபெரிய மலைகளடர்ந்தநாடு
பார்த்தால் ஸ்வீடன்தேசம்
பார்த்திபன்தனக்கே சொந்தமென்றூரார்
பகர்வதே உல்லர்சம்.

பெரியவிருக்ஷங்கள் நெருங்கியகாடுண்டு
பேர்பெற்ற தேவதாரம்
பிழைப்பில்லாதவர்களும் அந்தமரத்தைவெட்டிப்
பிழைக்கிறார் விஸ்தாரம்.

பனிமிகுந்தகாட்டில் வெண்கரடி ஸீல்என்னும்
பருத்தமிருகங்கள்வாசம்
பலரும்அம்மிருகங்களை வேட்டையாடிதுன்பப்படுத்
தாதிருப்பதே பிரயாசம்.

இந்நாட்டுக்கடுத்த பூமிதான் லாப்லாந்து
என்னும் பெயருடையது
இங்கும்பனிகுளிரும் மிகுந்தபச்சைப்பூண்டொன்றும்
இல்லையென்று பேர்பெற்றது.

அங்கே சூரியன் ஆறு மாதமட்டும்கண்ணுக்கே
அகப்படுகிறதில்லை
அந்நாட்டில்ஜலம் பனிக்கட்டியாகித்தரை
வழுக்கிச் சறுக்குந்தொல்லை.

பளிங்குபோல்பனிக்கட்டித் தரைமேல்கலைமான்களை
பண்டியில் கட்டிச்சவாரி
பலரும்செய்கிறார் என் மச்சானுக்கிதுகிடைத்தால்
பருசந்தோஷம் பாரீர்.

மான்களைக்குதிரைபோல் கட்டிசவாரிசெய்ய
வல்லமை யுள்ளவனே
வந்திங்கிருந்திதையும் பார்க்கவில்லையென்னுமனஸ்
தாபம் எனக்குத்தானே.

அத்தையாரும்தங்கையும் அன்பாயுனக்குக்காகிதம்
அடிக்கடி போடென்கிறார்;
அதனுடன்உனக்கும் மற்றெவருக்கும்அடியேன்
வந்தனம் வருகின்றதுபார்.

துருக்கிதேசம். (ராஜதானி: கான்ஸ்தாந்திநோபில்.)

இராகம் — கோலாஹலம், ஏகதாளம்.

(மதிலேர்னயோ சனபுட்டலேதா என்னும் சந்தம்.)

நானுனக்கிந்த துருக்கிதேசத்து
நகர்வளமெல்லாம் எழுதப்போகிறேன்
ஏனென்றாலெனக் கன்பனாகையால்
எதைக்கண்டேனோ அதைச்சொல்லுவேன்.

சின்னச்சிட்டுனக்கு எழுதாதேயென்று
செப்பினாரே அண்ணன் அப்படிக்கேதான்
பெரியகாகிதத்தில் எழுதலாகினேன்
பின்னையொன்றுமில்லை சின்னசங்கதி.

ருஷ்யாதேசத்தின் வழிபோகாமலே
ரொம்பதூரம்சுற்று வழியேபோகின்றோம்
எங்கள்மாமன் துருக்கர் தேசம்வந்தேயென்னை
அங்கேகாண்பதாக அவரெழுதினார்.

ஜெர்மனியா அங்கரிஸெர்வியாதேசம்போய்த்
திரும்புமுன்னமே வரும்படிசொன்னார்
எங்கள்யாத்திரை சரித்திரங்களை
எழுதவென்றாலோ இடங்கொள்ளா


Vienna
Buda Pesth
Bucharest
Belgrade
Silistria
Rustchuk
Varna
Scutari
Adrianople
CONSTANTINOPLE
Salonika
ADRIATIC SEA
Janina
Larissa
ASIA MINOR
Athens
TURKEY IN EUROPE.
1 PIASTRE

துருக்கி.


Archangel
St PETERSBURG
Riga
Novgorod
Moscow
Smolensk
Kazan
Warsaw
Kiev
Odessa
BLACK SEA
RUSSIA.

கான்ஸ்தாந்திநோபில் என்னுமிந்நகரம்
கண்ணுக்குவிசித்திரமாய்க்கண்டேனே
இந்நாட்டிஸ்திரீகள் முகத்தைமூடிக்கொண்டு
எங்கும்போகிறார்கள் எங்களையுங்கண்டு

நங்கஞ்சொல்லுவார்கள் நாணமுமில்லாத
நாட்டார்களென்று நகைசெய்கிறார்கள்
ஐரோப்பாகண்டம் ஆசியாகண்டம்
அதுஇதுவென்று பிரிக்கும்பாஸ்பரஸ்.

கடற்காலில்கப்பல் ஏறிப்போகும்போது
காலைமூடிக்கொள்ளவேணும்வஸ்திரத்தால்
வெப்பமானநாட்டில் மூக்காடொன்றுபோட்டு
வீதியிற்றிரிய ஆசோசம்மதிப்பார்

கான்ஸ்தாந்திநோபில் ஊரில்நானாவிதம்
காணலாகுநடை யுடைபாவனைகளை
பெரியமனிதர்களும் பச்சைவர்ணப்பாகை
பிரியமென்கிறார்கள் என்னவென்றுகேட்டால்

தாங்கள்மஹம்மது ஜாதியென்றுசொன்னார்
சரியாகத்தானே யிருக்கநான்கண்டேன்
காவிழுத்திழுத்து நடைநடக்கும்ஒட்டை
களுமதிகமுதிகில் காணலாகுமொட்டை

எளியஏழைகளும் சுமந்துசெல்லுகிறார்
எஜமான்தாத்துக்கோலால்பின்னால்குத்துகிறான்
இங்கிருக்குமெத்தைமாடமாளிகைகள்
இங்கிலாந்துதேவா லயங்கள்போலவே

கோவேறுகழுதையேறி மெத்தமெத்த
கொண்டாட்டம்கொண்டு செல்லுகின்றனர்
கோரியெங்குங்கண்டேன் அவர்கள்வந்துதொழ
கொடிகள்கண்டேன் அர்த்தசந்திரன்மேலிருக்க

பொன்கலசம்வைத்து கோளங்கள்உடைய
புதியகட்டடங்கள் மெத்தமேத்தவுண்டு
பட்டுஜல்லடம் முழங்கால்மட்டுமே
பச்சைபட்டுகுட்டை இடுப்பில்கட்டியே

பாதம்தேய்ந்திட வெறுங்காலால்எந்தப்
படிநடக்கிறாளோ ஐயோபாவமே
அவர்களோஅழகில்லாதவரல்ல [ம்.
அணியணியாய்முன்னும்பின்னும்போகக்கண்டோ

கடலுக்கப்புறம் இருக்குநேசனே
காகிதமுற்றும் எழுதியாச்சுது
ஒருவரிக்குமாத்ரம் இடமிருப்பதால்
உங்களுக்குவந் தனம்சந்ததம்.

ருஷியாவிலிருந்து அத்தையாருக்கு மருமகன் எழுதிய கடிதம். (ராஜதானி: ஸேந்துபீதர்ஸ்பர்க்.)

நான் ஊருக்குக் கடிதமெழுதவில்லையென்றும், அப்படியெழுதாதிருப்பதற்குக் காரணம் அன்பில்லாமையேயென்றும் நமது அத்தையம்மாள் சொல்லுகிறாள். அப்படி ஒருக்காலும் அன்பில்லாதவனாயிருக்கவில்லை. அடிக்கடி எனக்கு உங்கள் நினைவுதான். நீங்களெல்லாரும் இங்கு வந்து கூடயிருந்தால் எவ்வளவோ சந்தோஷமாயிருக்குமேயென்று நான் நாள்தோறும் நினைக்கிறேனே. ஆகிலும், உங்களைப்போல எனக்குப் பாட்டாகக் கடிதமெழுதத் தெரியாது. என்னால் கூடியவரையில் முயன்று பார்க்கிறேன்; மோனை எதுகைகள் சரிப்பட்டுவருகிறதில்லை. நான் இதுவரையில் கடிதமெழுதாததற்குக் காரணம் இந்தக் குறைவுதான். அப்படிப் பாட்

டாக இல்லாமற்போனாலும் வசனமாகவாவது என்னிடமிருந்து ஒருகடிதம் வரப்பெற்றுக்கொள்வது உனக்கு மிகவும் பிரியமென்று இங்கேயிருப்பவர்கள் சொல்ல இப்பொழுதுதான் எனக்குத் தெரியவந்தது.

துருக்கிதேசத்துப் பிரதானநகரமாகிய கான்ஸ்தாந்திநோபிலிலிருந்து அத்தை கடிதமெழுதியதற்குப் பிறகு நடந்த செய்திகளைக்கேட்க நீ விரும்புவாயல்லவா! ஏதோ வேலையைப்பற்றியவ்விடம்வந்திருந்த சிற்றப்பாவையும் சின்ன அத்தையம்மாளையும் பார்ப்பதற்காக அப்படியே நாங்கள் அவ்விடம் போனோம்; சிலநாள் அவ்விடத்திலிருந்தபின்பு துருக்கிதேசத்து மற்றவிடங்களைச் சுற்றிப்பார்த்தோம். பிறகு அங்கே புகைக்கப்பலேறிக் கருங்கடலைக்கடந்து ஒடெஸ்ஸா என்னுமிடத்துக்குப் போனோம். ஆனால் அந்தக் கப்பல்பிரயாணம் அத்தனையாகச் சுகமாயிருக்கவில்லை. அதனால் அந்தப்பிரயாணம் முடிந்து கரையேறினது எங்களுக்கு வெகு சந்தோஷமாயிற்று. அங்கிருந்து இருப்புப்பாதை வழியாய ஸெந்த பீதர்ஸ்பர்க்கு நகரத்திற்குப்போனோம். அங்கே சிறிய அத்தையம்மாளும் சிற்றப்பாவுமிருக்கிறார்கள். அந்தப்பிரயாணம் போகப் பலநாள் சென்றது. ஸெந்த் பீதர்ஸ்பர்க்கு என்பது வெகு சிறப்பான நகரம். அங்கே அழகான பெரிய கட்டடங்கள் சிலவுண்டு. அது மிகவும் குளிர்ச்சியான விடமாதலால் அந்நகரத்து எல்லாவீதிகளிலும் வீடுகளிலும் இப்பொழுதிருப்பதுபோல நன்றாக வெயில் காயும்பொழுது அவ்விடத்தின் காட்சி வெகு நேர்த்தியாயிருக்கும். வீட்டுக்குள் சாளரங்களைத் திறவாமலே ஒரு அறையையெப்பொழுதும் அவர்கள் உஷ்ணமாக வைத்துக்கொண்டிருப்பார்கள். என் சின்னத்தங்கையின் பிறந்தநாளுக்குப் பரிசாக அனுப்புவதற்கு நான் வைத்துக்கொண்டிருக்கிற கம்பளப்பட்டு சிறுபையன் ருஷியா படத்தில் போர்த்துக்கொண்டிருக்கிறானே அதுபோலவே, மயிர்க்கம்பளம் அணிந்துகொள்ளாமல் சீதகாலத்தில் இங்கே ஒருவரும் வெளிப்படமாட்டார்கள். சிலகாலங்களில் ருஷியாவிலே மிகுதியாகப் பனிபெய்து வீட்டு இறப்புவரையில் மூடிக்கொள்ளுமென்கிறார்கள். அங்கே இதைப்பார்க்கிலும் மிகப் பயங்கரமான செய்கையொன்றுண்டு, அதாவது: சிலசமயங்களில் ஓநாய்கள் வந்து அந்தப் பனிமூடிய வழியில்செல்லும் பிரயாணிகளையும் அவர்கள் ஏறிச்செல்லும் குதிரைகளையும் கொன்று தின்றுவிடுகின்றன. ருஷியாதேசத்துச் சத்திரங்கள் தங்குவதற்கு அத்தனை சௌக்கியமான விடமல்லவாம். நெருக்கமாய் சவப்பெட்டி மாதிரியாயிருக்கும். ஆயினும், ருஷியாவில் கோடைக்காலத்திலே பனியின் கொடுமையில்லாமல் யாத்திரைசெல்வது வெகு சுகமாயிருக்கும்.

இந்த ருஷியா ஐரோப்பாகண்டத்துத் தேசங்களுள் மிக்கக் கிழப்புறத்திலிருக்கும் தேசமாயும் நமது இந்துதேசத்திற்கு சமீபமாயுமிருக்கிறது. ஆகையால் ருஷியர்படைகள் சமயம்வாய்த்தால் எமனையும் பலகாரம்செய்யலாமென்று நமது தேசத்தையும் சற்று எட்டிப்பார்க்க வகைதேடி வருகிறார்கள். இந்த விஷயத்தை இங்கே விவரித்து எழுத இடங்கொடாது.

உங்களையெல்லாம் மறுபடியும் பார்க்கவேணுமென்று எனக்கு அதிக அபேக்ஷையாயிருக்கிறது. அங்குள்ளயாவரும் என்னிடத்தில் பிரீதி மாறாதிருக்கக்கடவீர்கள்.



ஸ்விட்ஜர்லாந்து.

ஸ்விட்ஜர்லாந்திலிருந்து அண்ணனுக்குத் தம்பி எழுதியகடிதம். (ராஜதானி: பேரன்.)

இராகம் - உசேனி - ஏகதாளம்.

நானிப் பொழுதீ ஸ்விட்ஜர் லாந்து
நாட்டி லிருக்கிறேன் - பொன்னண்ணா
நாட்டி லிருக்கிறேன்
நல்ல மனதுடன் இங்குள்ள தெல்லாம்
நன்று வெழுதுகிறேன்.

எத்தனையோ தேசம் சுற்றிவந்தே நான்
எங்குமே பார்த்ததில்லை - பொன்னண்ணா
எங்குமே பார்த்ததில்லை
இப்பெரு மலைகள் உச்சியைக் காண
எவராலும் ஆனதில்லை.

கப்ப லேறிஊ ருக்குத் திரும்புமுன்
இந்தத்தே சத்தில்கொஞ்சம் - பொன்னண்ணா
இந்தத்தே சத்தில்கொஞ்சம்
காலம் இங்கிருந்து போகலா மென்றெண்ணி
இருக்குதென் னெஞ்சம்.

அந்த மலைச்சிக ரத்திலே பனிகள்
அடைபட் டிருப்பதுண்டு - பொன்னண்ணா
அடைபட் டிருப்ப துண்டு
ஆல்ப்ஸ் பர்வதத் தொடரின் மீதேறி
அங்குள்ள தெல்லாம்கண்டு.

வருஷம்முழுதும் பனிஅங் குண்டென்று
வாசித் திருக்கிறாயே - பொன்னண்ணா
வாசித் திருக்கிறாயே
மனதாறக் கண்ட சங்கதி யாவும்
எழுதுவேன் பாராயே.

நானிந்த மலை நாட்டுத் தரையில்
நடப்பதை விட்டுவிட்டேன் - பொன்னண்ணா
நடப்பதை விட்டுவிட்டேன்
நல்ல கோவேறு கழுதை சவாரிதான்
நானும்பொய் சொல்லமாட்டேன்.

சில விடத்தில்செங் குத்தா யிருந்தாலும்
காலூன்றி வைத்துவழி - பொன்னண்ணா
காலூன்றி வைத்துவழி
தெரிந்து நடக்கும் கழுதை சறுக்கும்
என்பதை விட்டொழி.

இந்த ஸ்விட்ஜர்லாந்தில் ஜினீவா என்னும்பட்
டணம் பேர்பெற்றதென்று - பொன்னண்ணா
பட்டணம்பேர் பெற்றதென்று
இதைப் பூகோளப் படத்தில் படித்தே
இருக்கிறோ மல்லோ அன்று.

அப்படியே பெரன் நகர மென்பது
ஆதியில் பேர்பெற்றது - பொன்னண்ணா
ஆதியில் பேர்பெற்றது
அந்தப் பட்டணங்க ளெல்லாங் கண்ணுக்கழ
காகத் தோற்றப்பட்டது.

பெரியதடாகக் கரையோ ரத்திலே
கட்டடங் காண்கின்றோம் - பொன்னண்ணா
கட்டடங் காண்கின்றோம்
பின்னும் அங்குள்ள அழகான ஓர்சிறு
வீட்டில் இருக்கின்றோம்.

அந்தவீட்டின் பல கணிவாய் வழியாய்ப்
பார்த்தால் வெண்மையதாய் - பொன்னண்ணா
பார்த்தால் வெண்மையதாய்
ஆல்ப்ஸ் மலை யிருக்கும் வளமெல்லாம்
அறிந்தேன் உண்மையதாய்.

சூரியன் மலைவாயில் விழும்நேரத்தில்
தோன்றும் செம்மானத்தின்-பொன்னண்ணா
தோன்றும் செம்மானத்தின்
சொகுசை அறிந்து சொல்லத் தரமாமோ
சொல்வதெல்லாம் அதன்பின்.

நாட்டுப்புறத்துள்ள வீடுகள் மரத்தால்
கட்டி வெகுசுத்தியாய்ப் - பெர்ன்னண்ணா
கட்டி வெகுசுத்தியாய்
நன்றாய்ப் படிகட் டமைத்தனர் ஏறி
இரங்க வசதியாய்.

பெரும் புசலடித் தாலும் அவ்வீடு
விழுந்துபோ கிறதில்லை - பொன்னண்ணா
விழுந்துபோகிற தில்லை
பிடித்துப் பசுவுங் கன்றுகளைக் கட்ட
கீழடுக்கை யல்லை.

பச்சென்றிருக்கும் புல்லைமேய்ந்து ஆடு
மாடுகள் வந்துசேரும் - பொன்னண்ணா
மாடுகள் வந்துசேரும்
பால் கொடுக்கும் வேளையில் வந்துசொரியும்
பட்சத்தை நீபாரும்.

ஆட்டின் கழுத்தின் மணிச்சத்தங் காதுக்கு
ஆனந்த மாயிருக்கும் - பொன்னண்ணா
ஆனந்த மாயிருக்கும்
அநேக வர்ண மான்களைப் பார்க்க
அதிசயம் எவருக்கும்.

கூவிமுதல் அனந்தம் பட்சி வகைகள்
கும்புகும் பாகக்கண்டேன் - பொன்னண்ணா
கும்புகும் பாகக்கண்டேன்
கூட நீயும்இருந்து பார்க்க வில்லையென்
றென்னுள் எண்ணங்கொண்டேன்

இனி எழுதக் கடித மிடங்கொடா
தெல்லாம் ஊரில்வந்து - பொன்னண்ணா
எல்லாம் ஊரில்வந்து
என்னென்ன பார்த்தேனோ அதையெல்லாம் பேசலாம்
நீயும்நானும் சேர்ந்து.

இந்துக்கள் பணத்தை மெத்தச் செலவிட்டோ
மென்கிறார் இந்நாட்டார் - பொன்னண்ணா
என்கிறார் இந்நாட்டார்
இவர்கள் பணம்சம் பாதித்துச் செலவிட்
டிருக்கவே மாட்டார்.

தேச யாத்திரை செலவில்தானோ சிக்
கனமா யிருப்பது - பொன்னண்ணா
சிக் கனமாயிருப்பது
சித்தத்துக்கு ஆனந் தத்தையுண் டாக்குமே
தேசம்சஞ் சரிப்பது.

தேச யாத்திரை செய்யாத பேருக்குத்
தெண்பு கிடையாதே - பொன்னண்ணா
தெண்பு கிடையாதே
சிந்தித்துப் படித்தப் படிப்பு மாத்திரம்
சிறக்க மாட்டாதே.

இப்படி தேசயாத்திரை செய்யும் பிரயாணம்
முடிவாய் விட்டுதே - பொன்னண்ணா
முடிவாய் விட்டுதே
என்று சிந்திக்கிறோ மேயல்லாமல் பண
மென்ன அதுகெட்டுதே.

நாநாதேச யாத்திரை சரித்திரம்—ஐரோப்பாகண்டம்

முற்றிற்று.